# குறிஞ்சிப் பாட்டில் வாழ்வியல் செய்திகள்

*முனைவர் பேரா. க. அழகர்*
முதல்வர்
மகாத்மா காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சோலைசேரி

மலர்: 11
சிறப்பிதழ்: 1
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2024
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7739

## முன்னுரை

இலக்கியங்கள் தாம் தோன்றிய காலத்து மக்களின் வாழ்வியல் நெறிகளைப பிரதிபலிக்கின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தமக்கென்று சில பண்பாடுகளை வாழ்வியல் கூறுகளாகப் பேணிப் பாதுகாத்து வந்தனர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ப் பண்பாட்டினைத் தெரிவிப்பதற்குக் கபிலரால் பாடப்பட்டது. இந்நூல் 261 அடிகளைக் கொண்டு ஆசிரியப்பாவால் ஆனது. குறிஞ்சித் திணைக்குரிய முதற், கரு, உரிப்பொருட்களைக் கொண்டது. இதன் துறை அறத்தோடு நிற்றல் ஆகும். இந்நூலுக்குப் பெகளஒழுக்கத் தினைச் சிறப்பித்துக் கூறுவது குறிஞ்சித் திணையாகும். துலைவியைச் சந்திக்கும் தலைவன் வரவு, ஒரு நாள் தடைப்பட்டது அது தலைவியின் மேனியினை வாடச் செய்தது. இதுகண்ட செவிலி துன்பற்றாள். பின்பு தாய் தெய்வக்குற்றம் ஏற்பட்டதாகக் கருதி வெறியாட்டு மூலம் தலைவியின் நோய் நீங்கும் என எண்ணினாள், அதன் பின்பு களவெழுக்கத்தைத் தோழி செவிலியிடம் கூறி அறத்தோடு நிற்பாள். இதுவே குறிஞ்சிப் பாட்டு ஆகும். குறிஞ்சிப் பாட்டில் 99 மலர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. தெய்வ நம்பிக்கை, வழிபாடு, மறுபிறப்பு, நம்பிக்கை, தினைப்புனம் காத்தல், பூக்களைப் பறித்து விளையாடல், கழைக் கூத்தாடல், விருந்தோம்பல், திருமணமுறை போன்ற வாழ்வியல் செய்திகள் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

## தெய்வத்தை வணங்கும் வழக்கம்

தலைவனின் நினைவால் தலைவி வருந்துகிறாள். தலைவியின் உடல் மெலிவைக் கண்ட செவிலித்தாய் இந்நோய் தலைவிக்கு தெய்வத்தால் வந்தது என்றும் அதனால் தெய்வக் குற்றம் ஏற்பட்டு விட்டது என்றும் அறிகிறாள். எனவே செவிலித்தாய் பல்வேறு உருவங்களையுடைய கடவுளை வாயால் வாழ்த்தியும், மெய்யால் தொழுதும், பல மலர்களைத் தூவி இறைவனை வழிபட்டும், அதில் அகில் முதலிய நறுமணப் பொருள்களையும், சந்தனம் முதலிய மணப் பொருள்களையும் கொண்டு தலைவியின் நோய் நீங்க வழிபட்டாள் செவிலித்தாய். எனவே சங்ககால மக்களிடம் தெய்வ நம்பிக்கை இருந்ததை கபிலர் சுட்டுவதைக் காணலாம்.

***"பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும்
வேறுபல உருவின் கடவுள் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி""***
*(குறிஞ்சிப்பாட்டு - 5-8)*

**மறுபிறவி நம்பிக்கை**

மறு பிறவி நம்பிக்கை என்பது இறந்து மீண்டும் பிறப்பதாக நம்பும் பிறப்பு மறு பிறவி நம்பிக்கையாகும் என்கிறது (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 1012) சங்க கால மக்கள் மறு பிறவில் நம்பிக்கை வைத்தனர். தலைவன் வாக்களித்தபடி தன்னை மணந்து கொள்ளத் தலைவன் வராததைக் கண்டு தலைவி மிகவும் வருந்தினாள். மேலும் என் தலைவன் அவர் இப்பொழுது என்னை மணந்த கொள்ளா விட்டாலும், மறுமை உலகத்திலாவது நாங்கள் இருவரும் இணைவோம் அதுவரை நான் பொறுத்திருப்பேன் என்றாள்.

***"ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கென
மான் அமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்""***
*(குறிஞ்சிப்பாட்டு - 23-28)*

அடுத்த ஒரு பிறவியிலாவது தான் தலைவனோடு இணை பிரியாது இருப்பேன் என்று தாங்க முடியாத சோகத்துடன் கூறி, தலைவி தேம்பி அழுதாள். இக்கருத்தையே குறுந்தொகை கூறுவதைக் காணலாம்.

***"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"***
*(குறுந்தொகை - 49)*

**கழைக் கூத்து நிகழ்ச்சி**

கழை என்பதற்கு மூங்கில், குத்துக்கோல் எனப்பொருள் கூறுகிறது. (தமிழ் தமிழ் ஆங்கில அகராதி ப. 157) கம்பில் நின்று அருஞ்செயல் புரிபவன் கழைக்கூத்தாடி என்று அழைக்கப்படுகிறான். கழைக் கூத்து என்பதற்கு

***"'கயிற்றின் மேல் நடப்பது,
கம்பத்தின் மேல் நடப்பது***

போன்ற வித்தைகளைச் செய்துகாட்டும் கலை என்கிறது. (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 360)

சங்க காலத்தில் கழைக் கூத்தாடிகள் இருந்துள்ளனர். விழா நடைபெறுகின்ற ஊரில், ஒரு மரத்திற்கும் மற்றொரு மரத்திற்குமாக இழுத்துக் கட்டப்பட்ட நீண்ட கயிற்றின்மேல் நடந்து பெண்ணானவள் அவள் ஆடுவாள். அவள் ஆடும் ஆட்டத்தற்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைப்பார்கள்.

***"அரிக் கூட்டு இன்னியம் கறங்க ஆடு மகள்
கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்""***
*(குறிஞ்சிப்பாட்டு - 193-194)*

**தினைப்புனம் காவலுக்குச் செல்லுதல்**

மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும் ஒருவகைத் தானியமே தினையாகும். சங்க கால குறிஞ்சி நிலமக்கள் தினையை விதைப்பர். பின்பு தினையைக் காவல்காக்க தினைப்புனம் செல்வதைத் தங்கள் தொழிலாகக் கொண்டனர். தலைவியும், தோழியும் தினைப்புனம் காவல் காக்கச் செல்லுகின்றனர். துனைப்புனங்களில் யானை, புலி முதலிய விலங்குகளால் அழிவு நேராமல் காத்தற்பொருட்டும், கிளி முதலிய பறவைகளை விரட்டுவதற்காகவும் மரங்கள் மேல் உயர்ந்த பரண்கள் அமைக்கப்பட்டு இருக்கும், இப்பரண்கள் மலைப் பகுதியில் விளையும் பிரம்புகளால் பின்னி அமைக்கப் பட்டதாகும். தலைவியும், தோழியும் அப்பரண் மீதேறி கழல், தட்டை குளிர் போன்ற கருவிகளைக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தும் முறையறிந்து ஏற்றவாறு ஒலி எழுப்பித் தினை உண்ணவரும் கிளிகளை விரட்டுவர் என்கிறார் கபிலர்.

***"பெருங்குரல் - - -
நல்கோள் சிறுதினைப் படுபுள் ஓப்பி
எல்பட வருதியர் என நீ விடுத்தலின்"***
*(குறிஞ்சிப்பாட்டு - 39-40)*

"கலிகெழு மரமிசைச் சேணோன் இழைத்த
புலி அஞ்சு இதணம் ஏறி அவண
சாரல் சூரல் தகைபெற வலந்த
தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
களிகடி மரபின் ஊழ்ஊழ் வாங்கி
உரவுக் கதிர் தெறூஉம் உரப்பவிர் அமயத்து"

(குறிஞ்சிப்பாட்டு - 40-45)

### பெண்கள் வழிபாடு செய்தல்

இறைவனை வணங்கும் செயல் பிரார்த்தினை வழிபாடு ஆகும். மாலைக் காலத்தில் தொடி அணிந்த மகளிர் மனைகளில் விளக்கேற்றி வழிபாடு செய்ததை குறிப்பிட்டு குறிப்பிடுவதைக் காணலாம்.

"புந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி""

(குறிஞ்சிப்பாட்டு - 224)

### இக்கருத்தையே மதுரைக்காஞ்சி

"பெண் மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கம் கொளுஇ"

(மதுரைக்காஞ்சி - 556)

என்றும்,

"இரும்பு செய் விள்கின் ஈர்ந்திரி கொஇ
நெல்லும், மலரும் தூவிக் கைதொழுது""

என்று நெடுநல் வாடையும் குறிப்பிடுவதைக் காணலாம். (ப. 42-43)

### விருந்தோம்பல் முறை

தமது வீட்டிற்கு வந்த விருந்தினரை அன்போடு வரவேற்று விருந்து தந்து முறையாக உபசரித்தல் விருந்தோம்பல் முறை ஆகும். இக்கருத்தையே தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுவதைக் காணலாம்.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள்மாண்புகள்""

(தொல்காப்பிம் - கற்பியல் - 1098)

விழாக்காலங்களில் வீட்டின் கதவு திறந்தே இருக்கும். ஊரில் உள்ளோர் தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு அரிசியும், நெய்யும், மாமிசமும் கலந்து சமைக்கப்பட்ட உணவை வழங்குவர்.

"பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிகல்""

(குறிஞ்சிப்பாட்டு - 204)

### சங்க கால மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல்

தன்னுடைய அல்லது தான் சார்ந்து வரும் குழுவினருடைய பொது நலன், ஒற்றுமை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறை மற்றும் உரிய முறையில் நடந்து கொள்ளும் முறை ஒழுக்கமாகும் எனப் பொருள் கூறுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி - ப. 278)

முத்து, ரத்தினம் பொன் இவைகளால் செய்யப்பட்ட அணிகலன்கள் கெட்டுப் போனால் மீண்டும் அதனைச் சரிப்படுத்தி செம்மைபடுத்திக் கொள்ளலாம். ஆனால் நற்பண்பு, பெருமை ஒழுக்கம் கெட்டுப் போனால் அதனை குற்றமற்ற சான்றோர்களாலும், எந்த முனிவர்களாலும் முன்பு போல மாற்ற முடியாது என்கிறது குறிஞ்சிப்பாட்சுடு.

"முத்தினும் மணமானும் பொன்னனும் அத்துணை
நேர்வருங்குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
ஏளிய என்னார் தொன்மருங் கறிஞர்""

(குறிஞ்சிப்பாட்டு - 13-18)

இதன் மூலம் ஒழுக்கமுடைய வாழ்வே உயர்ந்த வாழ்வாக சங்க கால மக்கள் கடைப்பிடித்த செய்தியை அறிய முடிகிறது.

### தலைவன் சூளுரைத்தல்

தலைவனும், தலைவியும் களவில் சந்தித்துக் கொள்ளும் காலங்களில் ஒருவருக்கொருவர் பிறிவதில்லை என்று சூளுரைத்துக் கொள்வர். ஆதன்படி தலைவன் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமான முருகன் முன்பு தலைவியை நிறுத்தி முருகனைக் கைதொழுது வணங்கியும், அருவி நீர் குடித்தும் தலைவியை ஒருபோதும் பிரியமாட்டேன் என்று வஞ்சினம் கூறுவதைக் காணலாம்.

***"மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்ற
அம் தீம் தெள்நீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து""***

***(குறிஞ்சிப்பாட்டு - 209-214)***

### சங்க கால மக்களின் திருமண முறை

பெரும்பாலும் ஆணும், பெண்ணும் கணவன் மனைவியாகும் நிகழ்ச்சி அல்லது சடங்கு அல்லது கணவன் மனைவியாக வாழ சமூகத்தின் ஏற்பாடு திருமணம் ஆகும் என்கிறது (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப. 698). களவில் சந்திக்கும் தலைவன் தலைவியின் வாழ்க்கை கற்பாகத் தொடங்க வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

***"கற்பெபை படுவது கரணமொடு புணர
கோளர் குறி மரபின் கிழவன் கிழத்தியைக்
கோடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே""***

***(தொல் - பொருள் - 1088)***

தலைவியின் பெற்றோர் தலைவியின் கையைப் பிடித்துத் தலைவனின் கையில் கொடுப்பது திருமணத்திற்குக் கூடியிருக்கும் அனைவர் முன்னிலையிலும், தலைவியின் கையைத் தலைவன் பற்றினால் அதுவே திருமணம் முடிந்ததாகக் கருதப்படும்.

***"நேர் இறை முன்கை பற்றி நுமர்தர
நாடு அறி நன்மணம் அயர்தம்""***

***(குறிஞ்சிப்பாட்டு 231-232)***

### முடிவுரை

குறிஞ்சிப்பாட்டின் மூலம் சங்க கால மக்களிடம் காணப்படும் ஒழுக்கம், நம்பிக்கை, மறுபிறவி, கூத்தாடுகின்ற நிகழ்வுகள், தினைப்புனம் காவல் காத்தல், திருமண முறை, விருந்தோம்பல், சூளுரைத்தல் போன்ற வாழ்வியல் கூறுகளை அறிய முடிகிறது.